நோட்டு என்பது நெகோஷியபிள் இன்ஸ்ட்ருமெண்ட் அதாவது அரசியல் சட்டத்தின் 46 வது விதியின் கீழ் வருகிறது. அது 46ன் கீழ் வருவதால் மத்திய அரசுதான் இது சம்பந்தமாக முடிவை எடுக்க வேண்டும். மாநில அரசு இது சம்பந்தமாக முடிவை எடுக்க இயலாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–00).

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் தான் அந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் இப்போது பிரின்டெட் பிராமிசரி நோட் அச்சடித்து வைத்துக் கொண்டு, அதிலே கையெழுத்து வாங்கி விடுகிறார்கள், குறிப்பாக மணிலெண்டர்கள் இப்படி செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் துஷ்பிரயோகம் செய்கிற நிலைமை இருக்கிறது. வெறும் பாரத்தில் கையெழுத்து வாங்கி விட்டு, பிறகு அவர்கள் பூர்த்தி செய்து கொண்டு நீதி மன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள். இந்த நிலையைப்போக்கு வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

திரு. எம்.ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, நீதிபதியே அதைத்தான் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தான் எடுக்க முடியும். மாநில அரசுக்கு அந்த அதிகாரம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : மாநில அரசாங்கம் அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ? How can we bring it to the notice of the Central Government ?

திரு. எம்.ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : உறுப்பினர்களின் கருத்துக்களை ஒட்டி, மத்திய அரசுக்கு மாநில அரசு அறிவிக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

வினா எண்கள் 721–734 ஒத்தி வைக்கப்படுகின்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

(2) தகவல் கோரல் :

உறுப்பினர்களது அறிவிப்புகளை எடுத்துக் கொள்வதுகுறித்து.

1979 ஏப்ரல் 17]

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் நேற்றைய தினம் இந்தச் சட்டமன்றத்தில் வாகைக்குளம் துப்பாக்கி சூட்டிற்குப் பிறகு நடந்து இருக்கும் சில முக்கியமான நிகழ்ச்சிகள் நீதி விசாரணையை பாதிக்கிற நிலையில் இருப்பதால் அது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். ஒரு வாரத்திற்கு முன் கொடுத்தேன். நேற்று முன்தினமும் கொடுத்து இருக்கிறோம். அதை எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே, எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எடுத்துக் கொள்கிறீர்களா என்று கேட்டால் போதும். நான் எடுத்துக் கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : ஆசிரியர்கள் போராட்டம்பற்றியும், அவர்கள் கைது செய்யப்பட்டது பற்றியும் ஒத்தி வைப்பு தீர்மானம் கொடுத்து இருந்தேன். அதனுடைய நிலைமை என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசுத் தரப்பில் இருந்து பதில் வராததால் அப்படியே இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, என்.ஜி.ஓக்கள் கிளர்ச்சி சம்பந்தமாக அட்ஜார்ன்மெண்ட் மோஷன் கொடுத்து இருக்கிறேன். நேற்று பேச்சு வார்த்தை நடைபெறும் என்று சொன்னார்கள். ஆனால் 16-ம் தேதி நடைபெற வேண்டிய பேச்சு வார்த்தை அன்று நடந்ததாகத் தெரியவில்லை. எப்போது நடக்கும் என்றும் தெரியவில்லை. பேச்சு வார்த்தை எப்போது நடக்கும் என்று டெபனட்டாக இல்லாததால், அந்த அட்ஜார்ன்மெண்ட் மோஷன் இன்று எடுத்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஜி.ஓ.க்கள் பிரச்னை அடிப்படையில் அந்த யூனியனைச் சேர்ந்த தலைவர்கள் சில நாட்களுக்கு முன்பு தலைமைச் செயலாளரையும், நிதிச் செயலாளரையும் சந்தித்துப் பேசினார்கள். அதற்குப் பிறகு என்னை சந்தித்துக் பேசினார்கள். அதற்குப் பிறகு முதலமைச்சரை சந்தித்துப் பேசி, மீண்டும் 16-ம் தேதி பேசலாம் என்று முதலமைச்சர் சொல்லியதை ஒட்டி, 16-ம் தேதிக்கு மேல் என்ற அளவிற்குச் சொல்லி, அவர்களது போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க என்.ஜி.ஓ. யூனியனைச் சேர்ந்தவர்கள் தீர்மானம் போட்டு போராட்டத்தை நிறுத்தினார்கள். கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்

கொண்டார்கள். அந்தக் கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப் பெற்றது. நேற்றைக்கு முதலமைச்சர் அவர்களுக்கு மானியக் கோரிக்கை இருந்தது உங்களுக்குத் தெரியும். ஆகவே, நேற்றைக்கு கலந்து பேச இயலவில்லை. நாளைக்கு போலீஸ் மானியக் கோரிக்கை இருக்கிறது. அது முடிந்த உடன் முதலமைச்சர் அவர்கள் அவர்களுடன் கூடி கலந்து பேசி ஒரு நல்ல முடிவு எடுக்க இருக்கிறார்கள் என்பதை திரு. உமாநாத் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகரத்தில் 14-ம் தேதி ஆர்.எஸ்.எஸ். காரர்கள் ஊர்வலம் ஒன்று நடத்தி இருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஆய்விலே இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: ஆய்விலே இருக்கிறது என்று சொன்னால் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னால் சொல்ல இயலாது. என்னுடைய ஆய்விலே இருக்கிறது.

திரு. ர. ஜெபமணி: பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவரவர்களே, என். ஜி.ஓ. பிரச்சினை சம்பந்தமாக நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். ஆனால் இப்போதுமாண்புமிகு நிதியமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அது எந்தத் தேதிக்குள் முடியும்? உறுதியாக.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் பேசியதையே திரும்ப பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்க முடியாது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்டமன்றப் பேரவையின் செயலாளராக பொறுப்பு வகிக்கக்கூடிய திருவாளர் அழகிரிசாமி அவர்கள் இங்கே இல்லை. அப்படி இருக்கும்போது அவருக்கு பதிலாக யார் மாற்றுச் செயலாளர் என்பது தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் நிர்வாகப் பிரச்சினை. தயவுசெய்து உட்காருங்கள்.

1979 ஏப்ரல் 17]

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவரவர்களே, ஆறு மாதங்களுக்கு முன்பு இங்கே என்னுடைய அறைக்குப் பக்கத்து அறையில் உள்ள திரு. சுந்தரம், எம்.எல்.ஏ. அவர்களுடைய தங்கச்சங்கிலி, வாட்ச் போன்றவை திருட்டுப் போய்விட்டன. பிறகு அவை காவல் துறையின் முயற்சியால் திரும்பக் கிடைத்துவிட்டது என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. இதற்காக தமிழக முதலமைச்சரவர்களின் பொறுப்பிலே இருக்கும் காவல்துறைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தாற்போல தமிழ்நாடு காவல் துறையின் 1978–79-ம் ஆண்டுக்கான ஆய்வறிக்கைதான் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. 1979–80-ம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தகவல் கொடுக்கிறீர்கள். அது என்ன ஆயிற்று என்பது குறித்து செயலாளர் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, 3-4-79-ல் நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

முகவை மாவட்டம் வாகைக்குளம் துப்பாக்கிச் சூடு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''முகவை மாவட்டம், வாகைக்குளம், கீழ்க்குடி கிராமங்களில் துப்பாக்கிச் சூட்டை நடத்திய பிறகு இன்னும் அங்கு போலீஸ் முகாமிட்டிருப்பதைப் பற்றியும், அந்தக் கிராமங்களின் வழியாகப்போய்க் கொண்டிருந்த பஸ்களை நிறுத்தி விட்டது பற்றியும் ஏற்பட்டிருக்கிற பதட்ட நிலைமை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்று கேட்டு திரு. கூத்தகுடி ச.சண்முகம், திரு. செ.சிவசாமி. திரு. வி.கே. கோதண்டராமன், திரு. ஓ. சுப்பிரமணியன், திரு. நா. சுந்தரராஜ், திரு. சேலம் மு. ஆறுமுகம், திரு. கே. கந்தசாமி, திரு. மு. அம்பிகாபதி, திரு. பொ. உத்திராபதி, திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் ஒத்திவைப்பு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியம் வாய்ந்தது என்பதைப் பற்றி சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.